**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**

**வழக்கு எண்: CC – 04 /2023**

**வழக்கு சாட்சி :PW3(LW6)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகேசன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | ஆறுமுகம் | தொழில் | : | ஆசாரிவேலை |
| கிராமம் | : | கோட்டைத்தெரு | சமயம் | : | |
| தாலுக்கா | | இலுப்பூர் | வயது | : | 42 |

எதிரி ஆஜர்

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 01st day of July 2025.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கோட்டைத்தெருவில் குடியிருந்து வந்து ஆசாரி வேலை வருகிறேன். அ.சா.1 எனது அண்ணி ஆவார். கடந்த 12.09.2021 அன்று போலிசார் சம்பவம் இடம் வந்து தகராறு சம்மந்தமாக விசாரணை செய்து வரைபடம் வரைந்த போது நான் சாட்சியாக உடன்இருந்து பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலவாது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 2 /PW3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எ.த.கு.வி</u>**

நான் கையொப்பம் செய்ததாக சொல்லப்படும் பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வரைபடம் வரைந்ததாக சொல்லப்படும் பேப்பரில் உள்ள வீடு மற்றும் அடையாளங்களை நான் காட்டவில்லை என்றால் எனது அண்ணன் இருந்தார் அவர் காட்டினார். எனது அண்ணனிடம் நான் கையெழுத்து செய்த பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதில் நான் மட்டும் தான் கையொப்பம் செய்தேன் , வேறு யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. தனபால் மட்டும் தான் கையொப்பம் செய்தார். எனது சகோதரரிடம் ஏன் கையொப்பம் வாங்கவில்லை என்றால் அது பற்றி தெரியாது. நான் சொல்வது போல் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும்,

காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும் , வழக்கிற்காக சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.